பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 13 வெள்ளிக்கிழமை 27.05.2022 கதிர் 96

## புகைத்தலால் தினமும் 55 பேர் பரிதாபச் சாவு!

(இ.கலையமுதன்)

இலங்கையில் புகைத்தல் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் மரணத்தைத் தழுவுகின்றனர். அதேவேளை, வருடத்துக்குச் சராசரியாக 20 ஆயிரம் இலங்கையர்கள் மரணிக்கின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. ☞2

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரம்!

## சஜித் மீது பலரும் அதிருப்தி




சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்காதமையால் அதிருப்தியடைந்த ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் கட்சியிலிருந்து விலகி, அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக, எதிர்கால அரசியல் பயணத்தைத் தொடரவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். ☞2

## அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லையாம்

### பிரதமர் ஊடகப்பிரிவு மறுப்பு



ஊடக செய்திகளுக்கு அமைய, அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவிதமான தீர்மானமும் எடுக்கவில்லை என்று பிரதமர் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது ☞2

## நான்காவது தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4ஆவது கொரோனாத் தடுப்பூசி (பைஸர்) ஏற்றும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட 3ஆவது கொரோனாத் தடுப்பூசி பெற்று 3 மாதங்கள் கடந்த அனைவரும் 4ஆவது தடுப்பூசியை (பைஸர்) பிரதி சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை ☞2

# விமலின் மனைவிக்கு இரு வருடங்கள் சிறை

## கொழும்பு பிரதான நீதிவான் அதிரடி உத்தரவு




தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பியின் மனைவி சஷி வீரவன்ஸவுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ☞2

## வெல்கம எம்.பி. மீதான தாக்குதல்; சந்தேகநபர்கள் இருவர் சிக்கினர்!



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொட்டாவ பிரதேசத்தில் வைத்து ☞2

## கோட்டாபய - ரணில் அரசின் நாடகமே 21ஆவது திருத்தம்

### இப்படிச் சாடுகின்றது சஜித் அணி



அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கோட்டாபய - ரணில் தலைமையிலான அரசால்நாடகம்அரங்கேற்றப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

19 பிளஸ் என்பதே 21 ஆவது திருத்தச் சட்டமூலமாக வருகின்றது என ஆளுங்கட்சி கூறியது. ஆனால், 19 மைனஸ்தான் முன் வைக்கப்பட்டுள்ளது. 19 இல் இருந்த முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்படவில்லை.

அமைச்சரவை அனுமதி வழங்காத, 21ஆவது திருத்தச் சட்டமூலம் ☞2

### வல்லை மதுபான விடுதி கொலை;

## பிரதான சந்தேகநபர் நீதிமன்றத்தில் சரண்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, வல்லையிலுள்ள மாதுபான விடுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய நால்வரில் மூவர் ஏற்கனவே நீதிமன்றின் ☞2

## இந்தியாவுக்குக் கடத்த முயன்ற இரண்டு கிலோ தங்கம் சிக்கியது

### 3 சந்தேகநபர்களும் கைது

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து இந்தியாவுக்குக் கடத்த முயன்ற சுமார் 2 கிலோ தங்கம் கடற்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளதோடு 3 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மன்னார் கடற்பரப்பில் பயணித்த சந்தேகத்துக்கிடமான படகை வழிமறித்த கடற்படையினர் படகைச் சோதனையிட்ட வேளை மேற்படி தங்கம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட தங்கம் ஒரு கிலோவும் 960 கிராமும் எடை கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கடத்த முயன்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, மேலதிக சட்ட நடவடிக்கைக்காகச் சந்தேகநபர்கள் தங்கத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## 49ஆவது நாளாகவும் தொடரும் போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத் திடலில் முன்னெடுக்கப்பட்டு ☞2

## வல்லை மதுபான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 24 நாள்களின் பின்னர் பிரதான சந்தேகநபர் தனது சட்டத்தரணி ஊடாக நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

கடந்த மே 2ஆம் திகதி இரவு விடுதியில் மதுபானம் அருந்திய இரண்டு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் போத்தலால் குத்தப்பட்டு உயிரிழந்தார்.

சம்பவத்தில் திக்கம், நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் குணசோதி (வயது 25) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தையடுத்து போத்தலால் குத்தியவர் உள்ளிட்ட நால்வர் தலைமறைவாகிய நிலையில் நெல்லியடிப் பொலிஸார் தேடி வந்தனர்.

அவர்களில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபர் வீட்டில் வைத்து இரண்டு நாள்களின் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.

குடத்தனை மேற்கைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். மற்றையவரும் சில நாள்களின் பின்னர் சரணடைந்தார்.

சந்தேகநபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், பிரதான சந்தேகநபர் 24 நாள்களின் பின்னர் நேற்று தனது சட்டத்தரணி ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார்.

சரணடைந்த சந்தேகநபர் போத்தலால் குத்துவதாக வாக்குமூலங்கள் மற்றும் சி.சி.ரி.வி. காட்சி உள்ளதால் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க நெல்லியடிப் பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனையை முன்வைத்து மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா நீண்ட சமர்ப்பணத்தைச் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான், பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமையுடன் அடையாள அணிவகுப்புக்கும் கட்டளையிட்டார்.

## வெல்கம எம்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, கடந்த 9ஆம் திகதி கொட்டாவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் வைத்து தாக்குதலுக்கு இலக்கானார்.

இதன்போது, அவரின் தலை மற்றும் கை முதலான பகுதிகளில் காயம் ஏற்பட்டிருந்தது.

அதேநேரம், அவர் பயணித்த ஜீப் ரக வாகனமும் சேதமாக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இரண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

## 49ஆவது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரும் போராட்டம் இன்று 49 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. இந்தப் போராட்டத்துக்குப் பலர் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றனர்.

'கோட்டா கோ ஹோம்' என்ற கோஷத்துடனான இப்போராட்டம், நாளை 50 ஆவது நாளில் கால் பதிக்கின்றது.

## ஐக்கிய மக்கள்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கரு ஜயசூரியவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கி, அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கலாம் என கபீர் ஹாசீம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர். இதற்காக தனது தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை விட்டுக்கொடுக்க மயந்த திஸாநாயக்க தயாராகவே இருந்துள்ளார். இந்த முயற்சி வெற்றியளிக்காததால் கபீர் ஹாசீம் உள்ளிட்ட தரப்பும் மனமுடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் சஜித்தை தவறாக வழிநடத்துகின்றனர் என மேலும் சில உறுப்பினர்கள், தமது சகாக்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

## விமலின் மனைவி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போலி ஆவணங்களைக் கொண்டு, கடவுச்சீட்டைத் தயாரித்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வழக்கு மீதான விசாரணை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் இன்று நடைபெற்றது.

வழக்கை விசாரணை செய்த கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் தலைமை நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல, சஷி வீரவன்ஸவுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதித்து உத்தரவு பிறப்பித்தார். அத்துடன் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

## அரச உத்தியோகத்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என்று ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் செய்திகள் வெளிவந்திருந்தது. பிரதமருக்கு நெருக்கமான சிங்களப் பத்திரிகைகளிலும் இன்று இந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

இந்தநிலையில், பிரதமர் ஊடகப் பிரிவு இதனை மறுத்துள்ளது.

பிரதமர் ஊடகப் பிரிவு இன்று முற்பகல் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் எனவும், இது தொடர்பில் பிரதமர் தீர்மானம் எடுத்துள்ளார் எனவும் வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை.

சமர்ப்பிக்கப்படவிருக்கும் இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில் நிவாரணங்கள் வழங்கப்படவுள்ள அதேநேரம், சுகாதாரம் மற்றும் கல்வியைத் தவிர ஏனைய அமைச்சுகளுக்குமான ஒதுக்கீடுகள் குறைக்கப்படும் - என்றுள்ளது.

## புகைத்தலால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் விசேட ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்றபோதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ஆம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு இருப்பதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 2022ஆம் ஆண்டின் உலக புகையிலை எதிர்ப்புத் தினம் 'சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்' என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.

## நான்காவது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோண்டாவிலில் அமைந்துள்ள நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய-ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதற்காகக் கட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது. இது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நிறைவடையும் வரையே, இந்த நாடகம் நீடிக்கும். அதன்பின்னர் 21ஐக் கைவிட்டு விடுவார்கள் - என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622








நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தளபதிக்கு நேர்ந்த கதி

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான காலத்தில் மெச்சப்பட்டு, முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்ட பல படைத்துறையினர் இப்போது மெல்ல மெல்ல ஒதுக்கப்படுகின்ற நிலைமை தெரிகிறது.

முழுநேர படைத்துறை அதிகாரி என்ற மனநிலையோடு அரசியல் பதவியான ஜனாதிபதி நிலைமைக்கு உயர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ, இப்போது மெல்ல மெல்ல அரசியல்வாதியாக மாறும் நிலைமையின் பிரதிபலிப்பாக இது இருக்கக்கூடும்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது நாட்டின் வெளிவிவகார அமைச்சரிலும் விட செல்வாக்கும் ஆதிக்கமும் மிக்கவராக விளங்கினார் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான அட்மிரல் ஜயநாத் கொலம்பகே. இப்போது அவர் பதவியில் இல்லை. அவர் நிலைமை – செல்வாக்கு – செல்லாக்காசு மட்டத்தில்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஜெனரல் ஜகத் அல்விஸ்ஸின் நிலைமையும் அது தான்.

ஏன், பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் கடற்படை உயர் அதிகாரி ரியல் அட்மிரல் சரத் வீரசேகரவின் நிலைமை கூட அதுதான். இப்போது பல்லு பிடுங்கிய நிலையில் அவர்.

அதே நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவும் கூட. அடுத்த நான்கு தினங்களில் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகும் நிலைக்குத் தள்ளப்பட்ட கையோடு அவர் நெருக்கடியையும் எதிர்நோக்க இருக்கின்றார்.

கடந்த மார்ச் 31 ஆம் திகதி ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்துக்கு அருகிலும், கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடல் கலவரத்தை அடுத்தும் இடம்பெற்ற சம்பவங்களின் போது முப்படைகளும் கவனவீனமாகச் செயற்பட்டனவா என்பதை கண்டறிவதற்காக உயர்மட்டப் பாதுகாப்பு விசாரணைக் குழு ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருக்கிறார்.

இராணுவத் தளபதி பதவியிலிருந்து சவேந்திர சில்வாவை இறக்கிவிட்டு, இந்த விசாரணையை நடத்துவதற்கு ஜனாதிபதி ஒழுங்கு செய்திருப்பது சவேந்திர சில்வாவுக்கு சுருக்கு மாட்டும் எத்தனம்தான் என்பது வெளிப்படை.

கடந்த மே 9 தொடக்கம் அடுத்த ஓரிரு நாள்களுக்கு அரச தரப்பு எம்.பிக்களின் வீடுகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டு, தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அந்தக் களேபரங்கள் அடங்கி முடிந்த கையோடு, நான்கு நாள்கள் கழித்து – மே 14ஆம் திகதி – ஆளும் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்தித்தபோது அவர்கள் அனைவரும் ஒரே குரலில் இராணுவம் மீதுதான் புராணம் பாடினர்.

தங்கள் சொத்துக்கள், உடைமைகளைக் காப்பாற்றவும், அதன் மூலம் அரசின் பெயரையும் மரியாதையையும் தக்க வைப்பதற்கும் இராணுவம் தவறிவிட்டது என்றும், உரிய சமயத்தில் போதிய நடவடிக்கை எடுக்காமல் இராணுவம் செயற்பட்டதன் மூலம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது என்றும் அவர்கள் வரிசையாக முறையிட்டனர்.

அந்த முறைப்பாடுகளை ஒட்டிய குற்றவாளிக் கூண்டில் பதவி விலகிச் செல்லும் இராணுவத்தளபதி நிற்கப் போகின்றார்.

நாட்டை கொரோனாப் பேரிடர் தாக்கியபோது, அதற்கு எதிராகப் போராட வேண்டிய தேசிய பாதுகாப்புக் கட்டமைப்புக்கு தலைமை தாங்கும் பொறுப்பு மருத்துவத் துறை சார்ந்த ஒரு புத்திஜீவியிடம் கொடுக்கப்படவில்லை. மாறாக, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவை முன்னிலைப் படுத்தி அவரிடம் வழங்கப்பட்டது. அப்படி முறையற்ற நியமனம் வழங்கப்பட்ட போது வேறு ஏதேனும் முறையற்ற விடயத்தில் அவர் சிக்க வேண்டிய நிலைமை வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இராணுவ அதிகாரி மனநிலையிலிருந்தபடி பல்வேறு நியமனங்களையும் வழங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, அரசியல் கட்டாயம் இப்போது அவரை அரசியல்வாதியாக நடக்க வழிப்படுத்தியிருக்கின்றது. அதன் விளைவுகள்தான் இவையெல்லாம்.

# வெளிநாட்டுப் பயணம் பிசுபிசுத்துப் போனதும் தமிழ்த் தேசிய முலாம்பூச முற்படுகிறார் மணி!

## அவருக்கும் முன்னணிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்கின்றார் கனகரத்தினம் சுகாஷ்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உருவாக்கத்துக்கும் மணிவண்ணனுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. கட்சி உருவாக்கப்பட்ட பின்னர் ஒரு வேட்பாளராகவே சிலரால் கொண்டுவரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவரே மணிவண்ணன். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உருவாக்கப்பட்ட போது நாங்கள் சட்ட மாணவர்களாக இருந்தோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ்.

அவர் தொடர்ந்து மேலும் தெரிவிக்கையில் –


தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவின் தீர்மானத்தையும் மதிக்காமல் மத்திய குழு தேவை இல்லையென இருந்துவிட்டு தங்கள் முகமூடிகள் எல்லாம் பறந்து போயுள்ள நிலையில், அவர்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியை விட்டு நீக்கிய முடிவு சரியானது என்பதை அனைவருமே வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ளனர்.

மாநகரசபையில் தமிழினப் படுகொலை செய்ய பங்காளிகளாக இருந்த ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சி அமைத்தது மட்டுமல்லாமல் தங்களுடைய பதவிக்காக டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவோடு இணைந்து செயற்படுவதால் இவர்கள் யார் என்று தெரிந்துவிட்டது.

ஆரியகுளத்தைப் புனரமைத்து சிங்கள தேசியவாத வளர்ச்சிக்கும் இவர்கள் மறைமுகமாக ஆதரவு வழங்குகின்றனர். அவரது வெளிநாட்டுப் பயணமும் பிசுபிசுத்துப் போயுள்ள நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் மீண்டும் தமிழ் தேசிய முலாம் பூசி தமிழ்த் தேசியமக்கள் முன்னணியை பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வளவு காலமும் மறந்து போய் அதை தூசு தட்ட முற்படுகின்றார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அவர் உருவாக்கியதாகக் கூறுகின்றமை அப்பட்டமான பொய். நாங்கள் சட்ட மாணவர்களாக இருந்த போது இந்தக் கட்சி உருவாகியது. இந்தக் கட்சியை உருவாக்கியவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், மறைந்த பேராசிரியர் கென்னடி ஆகிய நான்கு பேருமே ஆகும். கட்சியின் உருவாக்கத்துக்கும் மணிவண்ணனுக்கும் எவ்வித மான தொடர்பும் கிடையாது. அந்த நேரத்தில் ஒரு வேட்பாளராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சி உருவாக்கப்பட்ட பின்னர் சிலரால் கொண்டுவரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவரே மணிவண்ணன் என்றும் தெரிவித்துள்ளார்.

# மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்கும் எண்ணமில்லை!

## முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவிப்பு



மீண்டும் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவியேற்கும் எண்ணம் தனக்கு இல்லை என்றும், மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார் என்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தில் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மீண்டும் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படவிருக்கிறார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் விளக்கமளித்துள்ள கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி–

மீண்டும் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவியேற்றுக்கொள்ளும் எண்ணம் எனக்கில்லை.

'என்னைப் பொறுத்தமட்டில் பாரிய நெருக்கடிக்கு மத்தியிலும் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மிகவும் சிறப்பாகச் செயற்பட்டுவருகிறார் என்றே கருதுகின்றேன்' என்று தெரிவித்துள்ளார்.

இந்த இடைக்கால அரசாங்கத்தின் புதிய நிதியமைச்சராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே புதிய ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்படக்கூடும் என்ற செய்திகள் வெளியாகியிருந்தன.

# எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்த பொதுப்போக்குவரத்து மறுசீரமைப்பு!

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் விநியோக தட்டுப்பாட்டின் காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எரிபொருள் பாவனையினை மட்டுப்படுத்தும் நோக்கில் பொதுப் போக்குவரத்து சேவை விரைவாக மறுசீரமைக்கப்படும் என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கை தலைமையகத்தின் அதிகாரிகளுடன் ரயில்வே தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் எரிபொருள் விநியோக கட்டமைப்பில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் வீண்விரயத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தனியார் வாகன பயன்பாட்டைத் தவிர்த்து பொதுப் போக்குவரத்து சேவையை ஊக்குவித்தால் எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளலாம்.

அரச பொது போக்குவரத்து சேவையை விரைவாக மறுசீரமைக்க உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும். தனி வாகன பயன்பாட்டைக் குறைத்து பொது போக்குவரத்து சேவையை ஊக்குவித்தால் அரச பொது போக்குவரத்து துறை அபிவிருத்தியடையும்.

ரயில் சேவைத்துறையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டு பொதுக்கொள்கையுடன் செயற்பட வேண்டிய தேவை தற்போது சகல தரப்பினருக்கும் உண்டு. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வெள்ளிக்கிழமை 27.05.2022

# உக்ரைன் தானிய ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் முட்டுக்கட்டை என ரஷ்ய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது



ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தானிய ஏற்றுமதி தொடர்பாக கூறுகையில், 'உக்ரைனிலிருந்து தானியங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதை ரஷ்யா தடுப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுக்கிறோம்.

உண்மையில், எங்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம்தான் உக்ரைன் தானிய ஏற்றுமதிக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது' என கூறினார்.

தற்போதைய போர் காரணமாக, உக்ரைனில் உற்பத்தியாகியுள்ள 2 கோடி தொன் தானியங்களை அந்த நாட்டு விவசாயிகளால் சர்வதேசச் சந்தைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், முன்னணி தானிய ஏற்றுமதியாளரான உக்ரைனிலிருந்து கொள்முதல் செய்ய முடியாததால், பல நாடுகள் உணவுப் பற்றாக்குறை அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

# பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் விலை அதிரடியாக உயர்வு; இம்ரான் கான் கண்டனம்



பாகிஸ்தானில் எரிபொருள் விலைகள் அதிரடியாக உயர்ந்துள்ளன. இதற்கு இம்ரான்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலையை லீற்றருக்கு 30 ரூபா உயர்த்தி பாஸ் ஷெரீப் அரசு அறிவித்துள்ளது.

இதன் மூலம் ஒரு லீற்றர் பெற்றோல் விலை பாகிஸ்தான் ரூபா மதிப்பில் 179 ரூபா 86 காசுகளாக விற்பனையாகிறது.


டீசல் ஒரு லீற்றர் 174 ரூபா 15 காசுகளாக உயர்ந்துள்ளது. மண்ணெண்ணெய் விலை ஒரு லீற்றர் 155 ரூபா 56 காசுகளாக உள்ளது.

இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தானின் நிதியமைச்சர் மிப்தா இஸ்மாயில், பெற்றோலிய பொருள்களின் விலையை உயர்த்துவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்றார். விலை உயர்த்தப்பட்ட பிறகும், நாங்கள் டீசலுக்கு லீற்றருக்கு 56 ரூபா இழப்பை சந்திக்கிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பெற்றோலிய பொருள்கள் விலை உயர்வுக்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானை ஆளும் மோசடி கும்பலால் நாடு பெரும் பணவீக்கத்தை சந்திக்கும் என்று அவர் எச்சரித்தார். ரஷ்யாவுடன் 30 சதவீத மலிவான விலையில் மசகு எண்ணெய் இறக்குமதி ஒப்பந்தத்தை தமது அரசு மேற்கொண்டதாகவும், ஆனால் பாஸ் ஷெரீப் அரசு அதை தொடரவில்லை என்றும் கூறினார்.

ஆனால் அமெரிக்காவின் கூட்டாளியான இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து மலிவான விலையில் மசகு எண்ணையை வாங்குவதன் மூலம் எரிபொருள் விலையை கட்டுக்குள் வைத்திருப்பதாகவும் இம்ரான்கான் பாராட்டு தெரிவித்துள்ளார்.

# கனடாவில் 16 பேருக்கு குரங்கு காய்ச்சல் பாதிப்பு!



கனடாவில் 16 பேருக்கு குரங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அனைத்தும் கியூபெக்கில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் நோயின் பரவல் குறித்த சமீபத்திய புதுப்பிப்பில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தல் சோதனைக்காக கனடாவின் தேசிய நுண்ணுயிரியல் ஆய்வகம் பல அதிகார வரம்புகளிலிருந்து மாதிரிகளை தொடர்ந்து பெற்று வருவதாக அறிக்கை கூறுகிறது.

இந்த நேரத்தில், குரங்கு காய்ச்சலின் தொற்றுகள் உள்ளூர் சுகாதார நிலையங்களால் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கியூபெக் மாகாணத்துக்கு பொது சுகாதார முகமை சிறிய அளவில் 'இம்வாமுனே' தடுப்பூசிகளை அனுப்பி வைத்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

# உக்ரைனிய எல்லையில் பெலாரஸ் படைகள்

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பின் மத்தியில், உக்ரைனிய எல்லையில் தங்களது படைகளை நிலைநிறுத்துவதாக பெலாரஸ்ய ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று (வியாழக்கிழமை) நடந்த காணொலி சந்திப்பின் போது, அவர் இந்த உத்தரவினை பிறப்பித்தார்.

நேரம் பறந்துவிட்டதாகவும், இந்த செயற்பாட்டுக் கட்டளையை நிறுவ வேண்டியதன் அவசியத்தை அவர்கள் தீவிரமாக உணர்ந்துள்ளனர் எனவும் கூறினார்.

மேற்கு மற்றும் வடமேற்கு கட்டளைகளுடன், இது தெற்கு கிளையாக இருக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்போது தெற்கு செயற்பாட்டுக் கட்டளை அமைக்கப்படவில்லை, குடியரசு தெற்கு எல்லைகளை உடனடியாகவும் தற்போதுள்ள செயல்முறையின் ஒரு பகுதியாகவும் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் படைப்பிரிவு தந்திரோபாயப் பிரிவுகள் சுழற்சி முறையிலான உத்தரவின் பேரில் உள்ளதாகவும், தமது உத்தரவுக்கமைய தெற்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும், எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் ராணுவம் அடைக்கலம் அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இன்னும் போர் நடக்கவில்லை என்ற போதிலும், இந்த போர் சூழ்நிலைகளில் துருப்புக்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.





# ரஷ்ய ராணுவத்தில் சேர்வதற்கான வயது வரம்பு ரத்து செய்யப்பட்டது

ராணுவத்தில் சேருவதற்கான வயது வரம்பை ரஷ்யா ரத்து செய்துள்ளது.

ராணுவ சேவையில் தொழில்நுட்பம், மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் அனுபவம் வாய்ந்தவர்களை இணைப்பதற்கு இந்த வயது வரம்பு ரத்து உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய போர் 3 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. எளிதாக உக்ரைனை ஆக்கிரமித்துவிடலாம் என்ற கணக்கில் இந்த போரை ரஷ்யா தொடங்கியது. ஆனால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு உதவி வருவதால் இந்த போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த போரில் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் ராணுவத்தில் சேருவதற்கான வயது வரம்பை ரஷ்யா ரத்து செய்துள்ளது. ரஷ்ய நாடாளுமன்றத்தில் இன்று இதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேறியது. இதற்குமுன் ராணுவத்தில் சேர ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் ரஷ்யர்களின் வயது வரம்பு 40 என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இந்த உச்ச வயது வரம்பை ரஷ்யா ரத்து செய்துள்ளது.

இதுகுறித்து ரஷ்யா கூறுகையில், இந்த புதிய நடைமுறை தேவைக்கு ஏற்ற, சிறப்பு தகுதி மற்றும் திறன் உள்ளவர்களை பணியமர்த்துவதை எளிதாக்கும். இந்த புதிய மசோதா படி, இன்னும் இளம் வீரர்கள் நிறைய பேரை ராணுவத்தில் இணைத்துக் கொள்ளலாம். அதேசமயம், ராணுவத்தில் இணைவதற்கான உச்ச வயது வரம்பு 40 ஆக இருந்த நிலையில், ராணுவ சேவையில் தொழில்நுட்பம், மருந்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் அனுபவம் வாய்ந்தவர்களை இணைப்பதற்கு இந்த வயது வரம்பு ரத்து உதவும். சமீபத்திய ஆண்டுகளில், ரஷ்ய இராணுவம் தன்னார்வலர்களை அதிகளவில் நம்பியுள்ளது. அங்கு 18-27 வயதுடைய அனைத்து ஆண்களும், ஒரு வருட கட்டாய இராணுவ சேவைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை உள்ளது

ஆனால், பலர் பல காரணங்கள் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் உரிய காரணம் கூறினால் மட்டுமே ராணுவத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

# தமிழ்நாட்டின் பங்களிப்புக்கு ஏற்ப நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் சென்னையில் பிரதமரிடம் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கை



தமிழகத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் மோடியிடம் தமிழகத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்.

பிரதமர் மோடி பங்கேற்ற நிகழ்வில் உரையாற்றிய மு.க.ஸ்டாலின், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின் பிரதமர் மோடி முதல் முறையாக பங்கேற்றுள்ள அரசு நிகழ்ச்சி இது. கல்வி, பொருளாதாரம், மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு சிறப்பாக விளங்குகிறது. அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியையே திராவிட மொடல் என்று கூறுகிறோம்.

மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கும் நிதிப்பங்கீடு காலப்போக்கில் மாறும். ஒன்றிய அரசின் திட்டங்களில் மாநில அரசின் பங்கு அதிகம். ஒட்டுமொத்த இந்திய நாட்டின் வளர்ச்சியில் தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது.

இந்திக்கு இணையான தமிழ் மொழியை உயர்நீதி மன்றத்தில் வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும். இந்திக்கு நிகராக அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும். நவீன தமிழ்நாட்டின் தந்தை கலைஞர் சொன்னதுபோல 'உறவுக்குகைகொடுப்போம்; உரிமைக்கு குரல் கொடுப்போம்'. எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்கை எட்ட, மக்கள் நலத்திட்டங்களை இணைந்து செயல்படுத்துவோம்.

தமிழ்நாட்டின் பங்களிப்புக்கு ஏற்ப, நிதி ஒதுக்கீடு அதிகரிக்க வேண்டும். சாலை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு காலப்போக்கில் குறைக்கப்படுகிறது. வரியை சமமாக பகிர்ந்தளிப்பதே உண்மையான கூட்டாட்சி.

ஒன்றிய அரசின் நிதி குறைப்பால் மாநிலங்களுக்கு நிதிச்சுமை ஏற்படுகிறது. தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய ஜி.எஸ்.டி. நிலுவைத்தொகை 14,000 கோடி ரூபாவை விரைந்து வழங்க வேண்டும், என தனது உரையில் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# குடும்ப அடிப்படையிலான அரசியல் ஜனநாயகத்தின் மிகப்பெரிய எதிரி!

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கருத்து



ஹைதராபாத்தில் இந்திய தொழில் வர்த்தகப் பாடசாலையின் 20 ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். அதற்கு முன்னதாக ஹைதராபாத்தில் நடைபெற்ற பா.ஜ.க. பேரணியில் தொண்டர்கள் மத்தியில் அவர் மோடி உரையாற்றியிருந்தார்.

தெலுங்கானாவில் குடும்ப கட்சிகள், தங்கள் வளர்ச்சியை மட்டுமே நினைக்கின்றன. ஏழை மக்களைப் பற்றி கவலைப்படாத இந்தக் கட்சிகள், ஒரே குடும்பம் எப்படி ஆட்சியில் இருக்க முடியுமோ, எவ்வளவு கொள்ளையடிக்கலாம் என்பதில்தான் அவர்களின் அரசியல் உள்ளது. மக்களின் வளர்ச்சியில் அவர்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை.

குடும்ப அடிப்படையிலான அரசியல் என்பது அரசியல் ரீதியான பிரச்சினை மட்டுமல்ல. ஜனநாயகத்தின் மிகப்பெரிய எதிரி. ஒரு குடும்பத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகமாக ஊழல் எப்படி மாறுகிறது என்பதை நம் நாடு பார்த்திருக்கிறது. தெலுங்கானாவிலும் பா.ஜ.கவினர் அரசியல் ரீதியாக குறிவைக்கப்படுகிறார்கள்.

இந்த குடும்ப அடிப்படையிலான கட்சிகள் திருப்திப்படுத்தும் அரசியலிலும், தங்கள் சொந்த வங்கிக் கணக்குகளை நிரப்புவதிலும் மும்முரமாக உள்ளன. அதே நேரத்தில் பா.ஜ.க. தெலுங்கானாவை தொழில்நுட்ப மையமாக மாற்ற விரும்புகிறது.

எனக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் நம்பிக்கை உள்ளது. மூடநம்பிக்கையில் நம்பிக்கை இல்லாத துறவியான யோகி ஆதித்யநாத்தையும் வாழ்த்துகிறேன். இதுபோன்ற மூட நம்பிக்கையாளரிடம் இருந்து தெலுங்கானாவை காப்பாற்ற வேண்டும், என்று தனது உரையில் மோடி குறிப்பிட்டிருந்தார்.

# கார்த்தி சிதம்பரத்தை 30 ஆம் திகதி வரையில் கைது செய்ய தடை விதித்தது சி.பி.ஐ. நீதிமன்றம்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ப.சிதம்பரம் கடந்த 2011 ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சராக இருந்தபோது, அவரது மகன் கார்த்தி சிதம்பரம் தனது செல்வாக்கை பயன்படுத்தி சட்டவிரோதமாக 263 சீனர்களுக்கு விசா பெற்றுக் கொடுத்தார் என சி.பி.ஐ. குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்காக கார்த்தி சிதம்பரம் 50 லட்சம் ரூபா லஞ்சம் பெற்றார் என கூறி அவர் மீது சி.பி.ஐ. சமீபத்தில் வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கில் கார்த்தி சிதம்பரத்தின் ஆடிட்டர் பாஸ்கர ராமன் கைது செய்யப்பட்ட நிலையில், சி.பி.ஐயின் அழைப்பாணையை ஏற்று கார்த்தி சிதம்பரம் இங்கிலாந்தில் இருந்து இந்தியா திரும்பினார்.


நேற்றுக் காலை 8 மணிக்கு கார்த்தி சிதம்பரம் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்துக்கு சென்று சி.பி.ஐ. அதிகாரிகள் முன்பு ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் ஏராளமான கேள்விகள் கேட்டு விசாரணை நடத்தினர் எனவும், விசாரணை முடிவில் கார்த்தி சிதம்பரம் கைது செய்யப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகின.



இந்த நிலையில், கார்த்தி சிதம்பரத்தை மே 30 ஆம் திகதி வரை கைது செய்ய இடைக்காலத் தடை விதித்து சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. கார்த்தி சிதம்பரம் தாக்கல் செய்த முன் பிணை மனு மீதான விசாரணையின்போது, நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. முன் பிணை மீதான அடுத்தகட்ட விசாரணை வரும் 30 ஆம் திகதி நடைபெறும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# பாலியல் தொழில் சட்டபூர்வமானது பொலிஸார் அதில் தலையிடக்கூடாது

## சுப்ரீம் கோர்ட் அதிரடித் தீர்ப்பு!




பாலியல் தொழில் சட்டபூர்வமானது பொலிஸார் அதில் தலையிடக்கூடாது. அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியாது என இந்திய சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது.

விருப்பமுடன் பாலியல் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு எதிராக தலையிடவோ அல்லது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவோ கூடாது என்றும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

விபச்சாரம் ஒரு தொழில் என்றும், பாலியல் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் கண்ணியம் மற்றும் சமமான பாதுகாப்பிற்கு தகுதியானவர்கள் என்றும் சுப்ரீம் கோர்ட் வலியுறுத்தியுள்ளது.

நீதிபதி எல்.நாகேஸ்வரராவ் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க 6 உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

பாலியல் தொழிலாளர்களுக்கு சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரிமை உண்டு. வயது மற்றும் ஒப்புதலின் அடிப்படையில் குற்றவியல் சட்டம் அனைத்து வழக்குகளிலும் சமமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். பாலியல் தொழிலாளி சட்டரீதியான வயது வரம்பையுடையவர் என்றும் சம்மதத்துடன்தான் அதில் பங்கேற்கிறார் என்பதும் தெளிவாகத் தெரிந்தால், பொலிஸார் தலையிடுவதையோ அல்லது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதையோ தவிர்க்க வேண்டும்.

எந்தத் தொழிலாக இருந்தாலும், அரசியலமைப்பின் 21 ஆவது பிரிவின் கீழ் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தனிநபருக்கும் கண்ணியமான வாழ்க்கைக்கு உரிமை உண்டு என்று கூற வேண்டியதில்லை. பாலியல் தொழிலாளர்களை கைது செய்யவோ, தண்டிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது என்றும், தன்னார்வ பாலியல் தொழில் சட்டவிரோதமானது அல்ல, விபச்சார விடுதியை நடத்துவது மட்டுமே சட்டவிரோதமானது என்றும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. பாலியல் தொழிலாளியின் குழந்தை பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளது என்ற காரணத்திற்காக தாயிடமிருந்து பிரிக்கக் கூடாது. மனித ஒழுக்கம் மற்றும் கண்ணியத்தின் அடிப்படை பாதுகாப்பு பாலியல் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு நீடிக்கப்படுகிறது, என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

மைனர் ஒருவர் விபச்சார விடுதியில் அல்லது பாலியல் தொழிலாளர்களுடன் வாழ்வது கண்டறியப்பட்டால், அந்தக் குழந்தை கடத்தப்பட்டதாகக் கருதக்கூடாது. பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் பாலியல் தொழிலாளர்களுக்கு உடனடி மருத்துவ-சட்ட பராமரிப்பு உட்பட அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

பாலியல் தொழிலாளர்களிடம் பொலிஸாரின் அணுகுமுறை பெரும்பாலும் மிருகத்தனமாகவும் வன்முறையாகவும் இருக்கிறது. அவர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படாத வர்க்கம் போல் உள்ளன. பாலியல் தொழிலாளர்களின் கைது, தேடுதல்கள் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் போது, பாதிக்கப்பட்டவர்கள் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள் என, ஊடகங்கள் அவர்கள் அடையாளங்களை வெளிப்படுத்தும் எந்த படத்தையும் வெளியிடவோ அல்லது ஒளிபரப்பவோ கூடாது, எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆணுறைகளைப் பயன்படுத்துவதை, பாலியல் தொழிலாளிகளின் குற்றச் சான்றாக காவல்துறை கருதக்கூடாது. மீட்கப்பட்டு நீதிபதிகளின் முன் ஆஜர்படுத்தப்படும் பாலியல் தொழிலாளர்களை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் சீர்திருத்த இல்லங்களுக்கு அனுப்பவும் சுப்ரீம் கோர்ட் பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரைகளுக்கு, அடுத்த விசாரணை திகதியான ஜூலை 27 அன்று பதில்களை அளிக்குமாறு மத்திய அரசை சுப்ரீம் கோர்ட் கேட்டுக் கொண்டுள்ளது.

# மட்டு. மாநகர சபையுடன் கைகோர்க்க வங்கி,நிதி நிறுவனங்களுக்கு அழைப்பு

## மக்கள் நலத் திட்டங்களுக்கு உதவக் கோரிக்கை





தற்போது நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கும், மட்டக்களப்பு மாந கர சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை தடையின்றி முன்னெடுப்பதற்கும் மாநகர சபையுடன் கைகோர்க்க வருமாறு மட்டக்களப்பு மாநகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வங்கிகள் உள்ளிட்ட நிதிநிறுவனங்களுக்கு மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் அரச–தனியார் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் மாநகர சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மாநகர முதல்வர், இவ்வாறு அழைப்பு விடுத்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் தனியார் துறையின் பங்களிப்பு அளப்பரியது. தனியார் துறையினரின் பங்களிப்பு இல்லாமல் நிலையான அபிவிருத்தியை எட்ட முடியாது. அதன் அடிப்படையில் மாநகர சபையின் செயற்பாடுகளில் தனியார் துறையினரையும் பங்குதாரராக இணைத்து நிலையான அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க விரும்புகிறோம்.

ஏற்கனவே, அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பல மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தற்போது நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில், மாநகருக்குள் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஒவ்வொரு நிதி நிறுவனமும் பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இதன் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் தடையின்றி முன்னெடுக்க முடியும். எனவே மாநகர சபையுடன் கைகோர்க்க வருமாறு மட்டக்களப்பு மாநகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனைத்து வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். – என்றார்.

மட்டக்களப்பு மாநகர சபையை இலங்கையில் ஒரு முன்னுதாரணமான சபையாகவும், அழகான நகரமாகவும் மாற்றியமைப்பதற்கு நிதி நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக பூங்காக்கள், சந்திகளை அழகுபடுத்தும் செயற்பாடுகளை இதன் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவே இதன் போது மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் கருத்து தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.லிங்கேஸ்வரன் மற்றும் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, பிரதம கணக்காளர் திருமதி ஹெலன் சிவராஜா, பொறியியலாளர் திருமதி. சித்திராதேவி லிங்கேஸ்வரன் உள்ளிட்ட மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகருக்குள் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

## பொத்துவில் கடல் பகுதியில் 2 மீனவர்களைக் காணோம்!

பொத்துவில் பிரதேசத்தில் இயந்திர படகில் மீன்பிடிக்க நேற்று முன்தினம்புதன்கிழமை அதிகாலை சென்ற இருவர் காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பில் அவர்களது உறவினர்கள் நேற்று பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொத்துவில், பாக்கியவத்தை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய முகமட் நௌவ்பர் மற்றும் 40 வயதுடைய முகமது தாஹீர் என்ற இருவரும் புதன்கிழமை அதிகாலை வீட்டில் இருந்து மீன்பிடிப்பதற்காக பொத்துவில் கடற்கரைக்குச் சென்றுள்ளனர். பின்னர் அங்கிருந்து இயந்திர படகில் மீன்பிடிக்க கடலுக்குச்சென்றவர்கள் இதுவரை கரைக்கு திரும்பவில்லை. இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன்பொலிஸார் இவர்களை தேடும்பணியை மேற்கொண்டுவருகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் சீனத் தூதுவர்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் மாவட்டத்தில் நேற்றும் இன்றும் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

சீனத் தூதுவர் குய் சென் ஹாங் மற்றும் அவரது பாரியார் உள்ளிட்ட சீன தூதரக அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சீன அரசினால் வறிய மக்களுக்காக வழங்கப்பட்டு வருகின்ற உலர் உணவு நிவாரணப் பொதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 2,500 பொதிகளில் ஒரு பகுதியை இந்த நிகழ்வின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு சீனத் தூதுவர் வழங்கி வைத்தார். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, சீன தூதுவர் குழு, மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தை சென்று பார்வையிட்டது.

வந்தாறுமூலை, கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு சீனத்தூதுவர் விஜயம் அங்கு சர்வதேச விவகார அலகினையும் திறந்துவைத்த பின்னர் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார்.

சீனத் தூதுவர் குழுவை கிழக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனக சிங்கம், பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

## பரீட்சையில் ஆள்மாறாட்டம் கல்முனையில் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

பரீட்சையின் போது சகோதரனுக்கு பதிலாக ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்து.

நாடு பூராகவும் கல்வி பொது சாதாரண பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தூர இடமொன்றில் இருந்து வருகை தந்து சமய பாட பரீட்சையை சகோதரனுக்குப் பதிலாக எழுதியிருக்கின்றார். அடையாள அட்டையின் படத்தை மாற்றியுள்ளமை விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

ஒரு முக தோற்றமுடைய இரண்டு சகோதரர்களும் தத்தமது அடையாள அட்டையில் மாற்றம் செய்து இந்த ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 32 வயதுடைய தனது சகோதரனுக்கு பதிலாக 28 வயதுடைய தம்பி முறையான சகோதரனே இவ்வாறு பரீட்சை எழுதி சிக்கியுள்ளார்.

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள பிரபல பாடசாலையில் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதிய இந்த சந்தேக நபரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் மறுநாளான செவ்வாய்க்கிழமை அன்று கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இரண்டு நாள்கள் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இச்சம்பவம் குறித்து உரிய தரப்பினரிடம் கல்வி அதிகாரிகள் மற்றும் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.





# மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும்; தேசிய விவசாய ஒருங்கிணைப்பு தலைவர் எச்சரிக்கை

அரசாங்கத்தின் தவறான விவசாய கொள்கையால்முழுவிவசாயத்துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது.

அரசின் மீது நம்பிக்கையில்லை ஆகவே பொதுமக்கள் இயலுமான அளவு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் கட்டாயம் ஈடுபட வேண்டும் என தேசிய விவசாய ஒருங்கிணைப்பின் தலைவர் அநுராத தென்னகோன் நாட்டு மக்க ளிடம் வலியுறுத்தினார்.

விவசாயத்துறை எதிர்கொண்டுள்ள மிக மோசமான நிலைமை, எதிர்வரும் காலங்களில் ஏற்படப் போகும் உணவு தட்டுப்பாடு தொடர்பில் வியாழக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகா நாயக்க தேரர்களுடன் கலந்துரை யாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் தவறான விவசாய கொள்கையால் தற்போது முழு விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபட தற்போது இரசாயன உரமும் இல்லை, சேதன பசளையும் இல்லை. விவசாயிகள் உர பற்றாக்குறையுடன் மேலதிகமாக தற்போது எரிபொருள் பிரச்சினையையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

எரிபொருள்,உரம் இவ்விரண்டும் இல் லாவிடின் குறைந்தபட்ச அளவிலேனும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடி யாத நிலைமை ஏற்படும்.

ஒரு வருடத்துக்கு மாத்திரம் 33 லட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும். டொலர் நெருக்கடி காரண மாக உணவுப் பொருள்களின் இறக்கு மதியும் எதிர்வரும் காலங்களில் மட்டுப் படுத்தப்படலாம்.

தவறான சேதன பசளை திட்டத்தால் பெரும்போக விவசாயத்தில் நெற் பயிர்ச்செய்கையின் விளைச்சல் 60 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

அரசாங்கத்தின் தவறான விவசாய கொள்கையால்முழுவிவசாயத்துறையும் மிக மோசமான விளைவுகளை எதிர் கொண்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பாரிய உண வுத்தட்டுப்பாடுஏற்படப்போகிறது.அதனை எதிர்கொள்ள வேண்டும் என அரசாங்கம் வெறும் பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட் டுக்கொள்கிறதே தவிர செயல் ரீதியில் முன்னேற்றகரமான வகையில் எவ்வித தீர்மானங்களையும் இதுவரையில் செயற்படுத்தவில்லை.

உணவு தட்டுப்பாடு தீவிரமடைந்தால் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதகாலப்பகுதியில் மக்கள் உணவின்றி பட்டினியால் உயிரிழக்கும் அவல நிலைமை ஏற்படும். நடுத்தர மக்களால் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்த நிலையில் தான் உள்ளது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கிடையாது. ஆகவே, பொது மக்கள் வெற்றுக் காணிகளில் தங்களால் முடிந்த வரை வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது அத்தியாவசியமானது.

தமக்கான உணவுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்துகொண்டால் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை இயலுமான வரையிலாவது இழிவளவாக்கிக் கொள்ளலாம். – என்றார்.

# மீன்பிடி நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கவுள்ளோம் பலநாள் மீன்பிடி படகு உரிமையாளர் சங்கம் காட்டம்

எமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற் கான எரிபொருள் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், மீன்பிடி நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ளவதாக அகில இலங்கை பலநாள் மீன்பிடிப் படகு உரிமை யாளர்கள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த சங்கத்தினர் மேலும் குறிப்பிடுகையில் –

நாளாந்தம் எரிபொருள்களின் விலை அதி கரித்துச் செல்வதால் தமது தொழில்களை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்.

எரிபொருள் விலையேற்றத்தால் 5 ஆயி ரத்துக்கும் அதிகமான மீன்பிடிப் படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாது கிடப்பில் உள்ளன.

எமக்கான நிவாரணம் எதுவும் இதுவரை அரசாங்கத்தால் கிடைக்கப் பெறவில்லை. இந்நிலைமை தொடருமானால் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை.

கடற்பரப்பில் பலநாள் மீன்பிடி நடவடிக்கை ளில் ஈடுபட்டு, மீன்பிடித்துறை ஊடாக நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு நாம் பெரும் சக்தியாக இருந்து வருவதுடன், அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுப்பதிலும் முன்னின்று உழைத்து வருகின்றோம் என்பதை நினைவுப்படுத்த விரும்புகின்றோம். – என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், நாம் தொழில்களை விட்டுச் செல் வதன் ஊடாக இந்த தொழில்களை நம்பியுள்ள பலருக்கும் தொழில்வாய்ப்பு இல்லாமல் போகும் அபாய சூழல் உருவாகும் எனக் குறிப்பி டப்பட்டுள்ளது.

# கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் அடையாள பணிப்புறக்கணிப்பு

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தி யர்கள்நேற்று (வியாழக்கிழமை) காலை முதல் அடையாள பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித் துள்ளனர்.

நேற்று (வியாழக்கிழமை) காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வைத்தியர்கள் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளனர் என வைத்தி யசாலை பணிப்பாளர் வைத்தி யர் ஷெல்டன் பெரேரா தெரிவித் துள்ளார். அடிப்படை சம்பளத் துக்கு மேல் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்பட மாட் டாது எனதிறைசேரிவிடுத்துள்ள சுற்றறிக்கைக்கு எதிர்ப்பு தெரி வித்து வைத்தியர்கள் குறித்த அடையாள வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விறகு அடுப்பு தீப்பற்றியமையால் மாடிக் குடியிருப்பில் தீ விபத்து!

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு, பொரளை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட வனாத்தமுல்லை பகுதியிலுள்ள தொடர் மாடி குடியிருப்பின் 10 ஆவது மாடியிலுள்ள வீடு ஒன்றில் தீ விபத்துச் சம்பவமொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. நாடளாவிய ரீதி யில் இடம்பெற்றுள்ள எரிவாயு தட்டுப்பாடு காரண மாக, குறித்த வீட்டில் வசித்தவர்கள் விறகு அடுப்பை பயன்படுத்தியமையால் தீ விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. குறித்த தீ விபத்தில் சமை யலறையிலுள்ள பொருள்கள் மற்றும் புத்தகங்கள் ஆகியன தீக்கிரையாகியுள்ளன. எரிவாயுவை பெற்றுக் கொள்வதில் பாரிய நெருக்கடி காணப் படுவதால், விறகு அடுப்புக்களை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி யிலுள்ள மக்கள் தெரிவித்தனர்.

# புலம்பெயர் தொழிலாளர்களின் டொலர் வரவு தொடர்ந்தும் வீழ்ச்சி

புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் டொலர் எண்ணிக்கையில் தொடர்ந் தும் கடுமையான வீழ்ச்சி காணப்படுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் அண்ணளவாக 65 கோடி டொலர்கள் அளவில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் மாதமொன்றுக்கு இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இந்த நிலை படிப்படியாகக் குறைந்து தற்போதைக்கு மாதமொன்றுக்கு 25 கோடி டொலர்கள் வரை குறைந்துள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி அவர்களின் உழைப்பை சட்டரீதியான வழிகளில் இலங்கைக்கு வரவழைத்துக் கொள்வதில் அரசாங்கம் இதுவரை போதிய கவனம் செலுத்தவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் பலரும் அதி ருப்தி வெளியிட்டுள்ளனர்.

# ஆறுமுகன் தொண்டமானின் 2 ஆம் ஆண்டு நினைவுகூரல்


இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமா னின் 2 ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு கள் மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று (வியாழக்கிழமை) உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

அந்த வகையில் மலையகப் பகுதிகளில் உள்ள கோவில்களில் விசேட பூஜை வழி பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டு, நடை பெற்றிருந்தன.

இந்த வழிபாடுகளில் கட்சியின் உறுப் பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

அந்த வகையில் கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாத் தலை மையில் கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அத்துடன் மறைந்த ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு அன்னதானங்களும் வழங்கப்பட்டுள்ளன.



கட்சியின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் நேற்றைய நினைவேந்தல் வழிபாடுகளிலும் அன்னதானம் வழங்கும் நிகழ்வுகளிலும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக செயற்பட்ட ஆறுமுகன் தொண்டமான், கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி சுகவீனம் காரணமாக இயற்கை எய்திருந்தார்.

ஆறுமுகன் தொண்டமான் முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கி ரஸின் முன்னாள் தலைவருமான சௌமிய மூர்த்தி தொண்டமானின் பேரன் ஆவார்.

1964ஆம் ஆண்டு பிறந்த ஆறுமுகன் தொண்டமான், கொழும்பு றோயல் கல் லூரியில் கல்வி பயின்றார்

1990 ஆம் ஆண்டு முதல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடாக செயற்பாட்டு அரசியலுக்குள் பிரவேசித்த அவர், 1993 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளராகக் கடமையாற்றினார்.

அதன்பின்னர் 1994ஆம் ஆண்டு கட் சியின் பொதுச் செயலாளராகப் பதவியேற்றுக் கொண்ட ஆறுமுகன் தொண்டமான், அடுத்துவந்த அரசாங் கங்களில் அமைச்சு பதவிகளை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2022இல் வெளியிடப்பெற்றது.